DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.281/2023**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜ்கமல் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மாரி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.08.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(இந்த சாட்சி பதிவானது காணொலி காட்சி வழியாக சாட்சி மாண்புமிகு. சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் ஆஜராகி காணொலி காட்சி வழியாக விசாரித்து பதிவு செய்யப்பட்டது.)

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சென்னை பெருநகர் காவல் J-1 சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.08.2020 ம் தேதி மதியம் 3.00 மணிக்கு தேவகோட்டை தாலுகா காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது தேவகோட்டை தாலுகா, K.சிறுவனுரைச் சேர்ந்த சண்முகவேல் மனைவி அமுதா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.326/2020, இதச

பிரிவுகள் 147,294(பி),323,506(1) and 4 of TNPHW Act ன்படி வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கினை என் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான கடம்பாகுடி கிராமத்திற்கு சென்று சாட்சிகள் காளிமுத்து, இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சாஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவ சாட்சிகளான 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் கைப்பற்றக்கூடிய தடையங்கள் எதுவும் இல்லை. சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடியபோது எதிரிகள் அனைவரும் தலைமறைவாகி விட்டனர். கடந்த 07.09.2020 ம் தேதி வழக்கின் எதிரிகளுக்கு 4(1)A crpc ன் கீழ் நோட்டிஸ் சார்பு செய்யப்பட்டது. பின்பு 10.09.2020 ம் தேதி வழக்கின் எதிரிகள் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனார்கள். இவ்வழக்கின் விசாரணையில் எதிரி கணபதி என்பவர் எவ்வித குற்றம் புரியவில்லை என தெரியவந்ததை தெரிந்து இவ்வழக்கில் இருந்து அவரது பெயரை நீக்கி அதனை தொடர்ந்து வழக்கின் பிரிவு 147, இதசவையும் நீக்கி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை 294(பி),323,506(1) and 4 of TNPHW Act ன் கீழ் மாற்றம் செய்தேன். **(மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி ராஜம்மாள் மீது 294(பி),323 ன்படியும் 2 வது எதிரி செல்வம் மீது 294(பி),323,506(1) இதச மற்றும் 4 of

TNPHW Act ன் கீழும் 3 வது எதிரி மீது 294(பி),4 of TNPHW Act ன் கீழும் 4 வது எதிரி மீது 294(பி)இதசவின்படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. புகாரை யார் எழுதினார்கள் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் புகார் கொடுக்கும்போது சண்முகவேல் என்பவரால் எழுதப்பட்டதாக தெரியவந்து அவரை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1, அ.சா.3 புகார் கொடுத்த அமுதாவின் மகன், மகள் என்றால் சரிதான். அ.சா.4 அமுதாவின் உறவினர் என்றால் என்னுடைய விசாரணையில் உறவினர் என்று தெரியவில்லை கிராமத்தில் வசிப்பவர் என்றுதான் தெரியும்.

2. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசவில்லை என்றும் பெண்ணை மானபங்கபடுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.